# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவராண்டு 2013
ஆவணி 16
ஜுல்கஃ 12
புதன் [1-9-1982]
நிறுவியது 1947
புத்தகம் 36
இதழ் 23
☎ 8164
விலை ரூபா 1.00


# விடுதலைப் போராளிகளை தூக்கில் போடாதே! [தமிழ்நாடு குமுறுகிறது]



## ஈழத்தமிழருக்கு பாதுகாப்பாக கலைஞர் தலைமையில் எழுச்சிக்குரல்!

இலங்கையில் தமிழீழ விடுதலைகோரும் தமிழீழ விடுதலைப் போராளிகள் சித்திரவதை செய்யப்படுவதையும், காலவரையின்றித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதையும் தமிழீழத்தில் சிறீலங்கா இராணுவம் மேற்கொண்டு வரும் அடக்குமுறைகளையும் கண்டித்தும், குட்டிமணி, ஜெகன் ஆகிய விடுதலைப் போராளிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை இரத்துசெய்து அவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், திராவிட முன்னேற்றக்கழகமும், திராவிடர் கழகமும் 28-8-82 சனிக்கிழமை தமிழ் நாட்டில் நடத்திய 'இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நாள்' உணர்ச்சியோடும் எழுச்சியோடும் நடைபெற்றது.

கழகம் விடுத்திருந்த வேண்டுகோட்படி தமிழர் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து இந்நாளை அனுட்டித்தனர்.

திமுகழகம் முன்னின்று நடத்திய இயக்கத்தில் திரு. கி. வீரமணி அவர்களைத்தளபதியாகக் கொண்ட திராவிடர் கழகமும் தன்னை இணைத்து செயற்பட்டது,

கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி சென்னையிலும், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் திண்டுக் கல்லிலும், கழகப் பொருளாளர் சாதித்திண்டிவனத்திலும் துணைப்பொதுச் செயலாளர்நாஞ்சில்கி.மனோகரன் காஞ்சிபுரத்திலும் உரையாற்றினர்.

### கலைஞர் உரை

சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலைஞர் கருணாநிதி ஆற்றிய உரையாவது:-

பக்கத்தில் வேதாரண்யம் கடற்கரையிலே இருந்து சுமார் இருபத்திஐந்துமைல் தூரம் சென்றுல்எட்டிவிடக் கூடிய தூரத்தில்இருக்கின்ற இலங்கைத்தீவில் தமிழ்ஈழம் கேட்டு போராடி வருகிறார்கள் இளைஞர்கள்;

அந்த இளைஞர்கள் விடுதலைப் புலிகள் என்றும்; விடுதலை அணியினர் என்றும் வர்ணிக்கப்படுகிறார்கள்.

இன்றைக்கு எழுபத்தைந்து பேருக்கு மேற்பட்டவர்கள் இலங்கையிலே உள்ள சிறைச்சாலைகளில் அடைபட்டிருக்கின்றார்கள். விசாரணை படிப்படியாக நடைபெறுகிறது.

இதில் இரண்டுபேருடைய விசாரணை முடிந்துவிட்டது: ஒரு இளைஞனுடைய பெயர் குட்டிமணி.இன்னொரு இளைஞனுடைய பெயர் ஜெகன்: இந்தஇரண்டு வாலிபர்களும் கடந்த13—ம்தேதிஇலங்கை உயர்நீதி மன்றத்திலேநிறுத்தப்பட்டு, அவர்களுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பைக் கேட்டு இரண்டு வாலிபர்களும் புன்னகை புரிந்தார்கள். அன்றைக்குத்தங்களுக்குமரணம் வாய்க்கப்போகிறது—தூக்கு மேடை நோக்கிச் செல்ல

—4-ம் பக்கம் பார்க்க

## இலங்கைபத்திரிகைப்பேரவையின் கட்டளை அட்டவணை "திருத்தம்"

தமிழினத்திற்கு குழிபறிக்கிறது குமார் பொன்னம்பலம் கட்சி என்று 1979ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25ம் திகதியன்று "சுதந்திரனில்" முதலாம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த விடயத்தில்

1979ஆம் ஆண்டு சித்திரை மாதம் 19தேதியளவில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவர்ப் பதவியிலிருந்து திரு;தா.சங்கரப்பிள்ளைராஜினாமாச் செய்ய வேண்டியதற்காகிய நியாயங்களை வெளியீடு செய்யப்பட்டிருந்த குறிப்பிட்ட விடயம்-

திரு. குமார் பொன்னம்பலத்தையோ அல்லது ஓர் "குமார் பொன்னம்பலம்கட்சி" சம்பந்தமாகவோ அவரை எவ்வகையிலேனும் பாதிக்கக்கூடிய கூற்றுக்களையோ திரு. தா. சங்கரப்பிள்ளை அவர் குறிப்பிட்டிருந்தார் எனத் திரிக்கப்பட்டுஅத்துடன் திரு, தா. சங்கரப்பிள்ளை, தான் ராஜினாமாச் செய்யும்போது வெளியிட்டிருந்த நியாயங்களுடனும் மேலும். திரு. தா. சங்கரப்பிள்ளை அளித்திருந்த வாய்ச் சாட்சியங்களும் அச்சீடு செய்யப்பட்டிருந்த பத்திரங்களும் தமிழரசுக்கட்சி தமிழ் காங்கிரசை விழுங்கிவிட முயன்றுகொண்டு இருப்பதாகவும் அவர் தமிழர் விடுதலை கூட்டணியைப் பற்றிய முக்கியமான கண்டனங்களையும் இக்கட்டுரை மழுங்கச் செய்திருந்தன.

## பாரிஸ்மாநகரிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

# "கூட்டணி பேச்சுவார்த்தை என்னாச்சு? குட்டிமணி, ஜெகனுக்குத் தூக்காச்சு!"

தமிழீழ விடுதலைப் போராளிகளான குட்டிமணி, ஜெகன், ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையைநிபந்தனையின்றி இரத்துச் செய்யக்கோரியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் இளைஞர்களையும் உடனடியாக விடுதலைசெய்யுமாறு சிறீலங்கா ஜனதிபதியை வலியுறுத்தியும் பிரான்சில்வாழும் தமிழீழ விடுதலைப் போராளிகள் 23.8.82 இல் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைநடத்தினர்.

இந்த ஊர்வலத்தை பிரான்ஸ்தமிழர்இயக்கமும், பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவும் இணைந்து நடத்தின, இந்த ஊர்வலத்தில் பெண்கள் உடபட 500க்குமேற்பட்ட விடுதலைப் போராளிகள் பங்கேற்றனர்.

காலை 9.45 மணி முதல் 11 மணி வரை ஊர்வலம் மூன்றுமைல் தூரமான வீதிகள் ஊடாகச்சென்று பிரான்சில் உள்ள சிறீலங்காத் தூதரகத்தைச் சென்றடைந்தது;

இந்த ஊர்வலத்தில் சிறீலங்கா அரசைக் கண்டிக்கும் சுலோகஅட்டைகள் எடுத்துவரப்பட்டதுடன், பிரெஞ்சு மொழியில், ஈழத் தமிழர் அவலத்தை விளக்கும் துண்டுப்பிரசுரங்களும்வழிநெடுக விநியோகிக்கப்பட்டன.

—4-ம் பக்கம் பார்க்க

## தேர்தல் அனைத்தையும் பகிஷ்கரிப்போம் தமிழீழ விடுதலையை முன்னெடுப்போம்!

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

குட்டிமணி, ஜெகன், மரணதண்டனை பெறுவதற்கு

# நெல்லியடி பொலீஸ் கொலையே காரணம்என்கிருர் அமிர்தலிங்கம்

## துப்பாக்கி ஏந்தும் இளைஞர்களால் இனமே அழியுமென்று எச்சரிக்கை

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் குற்றவாளியாககாணப்படும் எவருக்கும் மரண தண்டனை விதிக்க முடியாதபடி அந்தச்சட்டத்தைத்திருத்துமாறு எத்தனையோ மாதங்களாக அரசுடன் வாதாடினேன். அரசாங்கமும் சட்டத்தைத் திருத்துவதற்கு ஒப்புக்கொண்டுநகல் திருத்தச் சட்ட மூலத்தையும் தயாரித்தது. ஆனுல் நெல்லியடியில் நடந்த பொலிஸ் கொலைச் சம்பவத்தைக் காரணம் காட்டி அரசு சட்டத்திருத்த மூலத்தைக் கைவிட்டுவிட்டது.

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 22-8-82 இல் நடைபெற்ற த. வி. கூ. பொதுக்கூட்டத்தில் பேசிய திரு. அ.அமிர்தலிங்கம் பா.உ.கூறியுள்ளார்,

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது;—

'சட்டத் திருத்தத்தைப் பொலிசாரும் இராணுவத்தினரும் எதிர்க்கின்றனர் என்ற காரணத்தை முன் வைத்தே அரசு திருத்தத்தைக்கொண்டுவரவில்லை.

நாம் அடைய வேண்டிய இலக்கு ஒன்று இருக்கிறது. அதை அடைவதில் இளைஞர்கள் தீவிரமாக இருக்கவேண்டும். இலக்கை அடைவதற்கு இளைஞர்கள் மத்தியில் கட்டுக்கோப்புஇருக்கவேண்டும் ஒருவரையொருவர் சுட்டுக் கொல்வதை நிறுத்தவேண்டும்.

### துப்பாக்கி ஏந்துவது அவமானம்!

நினைத்த நேரத்தில் நினைத்தபடி துப்பாக்கிஏந்தி அட்டகாசம் புரிவதால் யாருக்கும் நன்மை ஏற்படாது. இதனுல் துப்பாக்கி ஏந்துபவர்களே அழிவார்கள். எமது இனமும் அழியும், ஆயுதம் ஏந்துவது எமது இனத்துக்கே அவமானமாகும்.

இப்படியான அழிவுஏற்படும்போது எமது எதிரணியினருக்கு அது வாய்ப்பாக இருக்கும். அவர்கள் நம்மத்தியில் ஊடுருவிவிடுவார்கள்: அவ்வாருனவர்கள் நமது இனத்துக்கு ஒத்து வராதவர்கள்.

நான் தமிழ் நாடு சென்றிருந்தபோதுபிணையில்விடுவிக்கப்பட்ட தமிழ்இளைஞர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களுக்கு அறிவுரைகூறினேன் தமிழ்நாடு முதலமைச்சரைச் சந்தித்து எமது இளைஞர்களுக்கு நல்லபாதுகாப்புஅளிக்குமாறு கேட்டுக்கொண்டேன் அவர்கள் நன்ருக இருக்கிருர்கள். அவர்களைப்பற்[illegible] இங்குள்ள எம[illegible] மக்கள் சிறிதும் கவலை கொள்ளத் தேவையில்லை.'

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பேசினுர். (ஆதாரம்:- 24-8-82 நாளேடுகள்)

---

# பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகிவிட்டனவா?

## துப்பாக்கி இளைஞர்களின் குற்றச்சாட்டுக்கு வவுனியா எம்.பி.யின் அறிக்கையும் ஆதாரம்

அண்மையில் (20-8-82) யாழ்ப்பாணத்தில்க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறும், இருபரீட்சைமண்டபங்களில் துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள் நுழைந்து, பரீட்சை வினுத்தாள்களைக்கொள்ளையடித்துச் சென்றதாகச் சொல்லப்பட்டசெய்தியாவரும் அறிந்ததே.

அவ்வாறு வினுத்தாள்களை அபகரித்துச்சென்றஇளைஞர்கள் அங்கே சில துண்டுப்பிரசுரங்களை வீசிவிட்டுச் சென்றுள்ளனர். அத்துண்டுப் பிரசுரம், தமிழீழ மாணவர் நலன்பேணும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரசாரக்குழுவினுல்வெளியிடப்பட்டதாக அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### துண்டுப் பிரசுரம்

'தமிழீழ மாணவர்களே எச்சரிக்கை' என்கிற தலைப்புடன் அப்பிரசுரம் அமைந்திருந்தது. அப்பிரசுரத்தில்;

"உங்கள் திறமைக்குஆப்பு வைக்கும் முயற்சி அம்பலம், தமிழ் மாவட்டங்களில் வாழும் சிங்களமாணவர்களுக்கு க.பொ.த. உயர்தர பரீட்சை பற்றி இரகசிய வகுப்புக்கள் நடத்தப்படுவதுஅறியப்பட்டிருக்கிறது. வவுனியா திருமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்த இரகசிய வகுப்புக்கள் நடைபெறுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது- இதனை உங்களுக்குஅறியத் தருவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேம். 17/8/82 மாலை 5மணியிலிருந்துஇரவு 8 மணி வரை வவுனியா சிங்கள மகாவித்தியாலயத்திலும் இந்த இரகசிய வகுப்பு நடத்தப்பட்டது எங்கள் உளவாளிகள் மூலம் ஆதாரபூர்வமாக அறியப்படுகிறது' இதற்கு விளக்கம் தருமாறு தமிழீழ மாணவர்கள் சார்பில் அரசைக்கோருகிறேம்'

இவ்வாறு இத்துண்டுப்பிரசுரத்தில் காணப்பட்டதாம். (வீரகேசரி 22-8-82)

### பரீட்சை ஆணையாளர் மறுப்பு!

இதற்குப்பின்னர், இதுசம்பந்தமாக விளக்கம் அளித்த பரீட்சை ஆணையாளர், இது ஆதாரமற்ற குற்றச்சாட்டென்றும், அவ்வாறு இரகசிய வகுப்புக்கள் நடத்தப்பட்டுகேள்வித்தாள்கள்முன்கூட்டியே வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படுவது அபாண்டமானது, என்றும் கூறியிருந்தார்.

### இளைஞர்களுக்கு அமிர் கண்டனம்!

பரீட்சைவினுத்தாள்களைக் கொள்ளையடித்த இளைஞர்களைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் வன்மையாகக் கண்டித்தார்.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதனுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசும் போதே இளைஞர்களின்மேற்படி செயலைக் கண்டித்துத் திரு. அ- அமிர்தலிங்கம்பின் வருமாறு அறிவித்தார்-

"எம்மை அநியாயமாக அடக்கி ஆளும் இனத்துக்கு எதிராகக்கிளர்ந்தெழும்படி நாம் எவரையும் கோரவில்லை. இளைஞர்கள் மத்தியில் அமைதியும், சமாதானமும் அன்பும் பண்பும்கட்டுப்பாடும் நிலவவேண்டும். அண்மையில்பரீட்சைவினுத்தாள்களைக் கொள்ளையடித்து சில இளைஞர்கள் பரீட்சைகளையே குழப்ப முயன்ருர்கள். இப்படியான கட்டுப்பாடற்ற செயலைநாம்அனுமதிக்க முடியாது. இதுமுழுத்தமிழ்ச் சமுதாயத்தையுமே பாதிக்கக் கூடியசெயலாகும். இத்தகைய செயல்களால் எவருக்கும் பயன் இல்லை"

இதன் பின்னர் இளைஞர்களால், கொள்ளையிடப்பட்ட வினுத்தாள்கள் மறுபடியும் அப்படியே பரீட்சைத் திணைக்களத்துக்குத் தபாலில் அனுப்பப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறியது.

### வவுனியா சிவா ஆட்சேபம்!

வினுத்தாள்களை கொள்ளையடித்தோர் தமது துண்டுப் பிரசுரத்தில் சுமத்தியிருந்த குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் விதத்தில் வவுனியா பா-உ திரு-தா.சிவசிதம்பரம் இறுதியாகவிடுத்திருந்த'அறிக்கை அமைந்துள்ளது-

வவுனியாவில் உள்ளபரீட்சைமண்டபம் ஒன்றில்விலங்கியல் வினுத்தாள்முன்கூட்டியே வெளியாகிவிட்டதாகப் புகார் கிடைத்துள்ளதாகவும், அது சம்பந்தமாகவிசாரணை நடைபெற வேண்டும் என்றும் திரு. சிவசிதம்பரம் பரீட்சை ஆணையாளரிடம் கோரியுள்ளார்:

22/8/82 இல் விலங்கியல் பரீட்சைநடைபெற்றபோது அதில் ஒரு கேள்விக்குரிய விடைகள் அடங்கிய தாள் ஒன்றை வவுனியாவில் பரீட்சை மண்டபம்ஒன்றிலிருந்து மாணவர்கள் கண்டெடுத்து வவுனியாபா உ.விடம் ஒப்படைத்துள்ளனர்.

அந்தத்தாளில் ஒரு கேள்விக்குரிய விடையான வரைபடம் ஒன்று ரூேனியோ மூலம் பிரதிசெய்யப்பட்டிருந்தது- அதே தாளில் இன்னும் மூன்றுகேள்விகள்டைட் செய்யப்பட்டும் அவற்றுக்குரிய விடைகள் கையெழுத்தில் எழுதப்பட்டும் இருந்தன என்று சொல்லப்படுகிறது.

சில மாணவர்களுக்குபரீட்சை வினுத்தாள்கள் முன்னதாகவே கிடைத்திருக்கின்றன: அவர்கள் விடைகளை வேறு தாள்களில் எழுதிப் பரீட்சை மண்டபத்துக்குள் கொண்டு செல்லமுயன்றதாகவும் புகார்செய்யப்பட்டுள்ளது.

---

## தமிழ் இளைஞர் கைது

யாழ் இரகசிய பொலிஸ் முகாமுக்குமுன்னுல் சந்தேகத்திற்கு இடமான முறையில்நடமாடியதாக யாழ் பொலீசார் அச்சுவேலியைச் சேர்ந்த ஜெயரத்தினம் எனும் இளைஞரைக் கைது செய்தனர். இவர்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# குட்டிமணி, ஜெகனை நிபந்தனையின்றி விடுதலை செய்க!

## பதினொரு அமைப்புக்கள் சார்பில் சிறீலங்கா துணைத் தூதுவரிடம் கோரிக்கை

### தமிழக, ஈழ, மாணவர்கள் நடவடிக்கை

குட்டிமணியையும் ஜெகனையும் உடனே நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என ஆகஸ்ட் 19இல் ஈழமாணவர்கள் மற்றும் தமிழக மாணவர்கள் சார்பில்— இலங்கைத் துணைத்தூதுவரிடம் மகா விண்ணப்பம் தரப்பட்டது.

மாணவர்கள் ஊர்வலத்திற்குத் தடைவிதிக்கப்பட்டதால்—ஐவர்கொண்ட குழு மட்டும் இலங்கை துணைத் தூதுவரைச் சந்தித்து மகா விண்ணப்பம் தந்தது.

சட்ட ஒழுங்குப் பிரச்சினையைக் காரணம் காட்டி ஆகஸ்ட் 19இல் குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்குஆதரவாக இங்குஈழ மாணவர்கள் நடத்தவிருந்த இந்த ஊர்வலத்துக்கு பொலிஸ் தடைவிதிக்கப்பட்டது, இத்தடை உத்தரவு நேற்றுமாலை தரப்பட்டது,

எனினும் தடைவிபரம் அறியாமல் ஈழமாணவர்களும் தமிழகமாணவர்களும் ஆயிரக்கணக்கில்இன்றுகாலை நேப்பியர் பூங்காவுக்கு முன்னே கூடிவிட்டனர்.

மாணவர்கள் அமைப்புக்களையும் வேறு பல அமைப்புக்களையும் சார்ந்த ரமேஷ் தாஸ், சேலம் பாவரசு, குரு, இருதயமணி மற்றும் பலர் அவர்களிடம் நிலைமையை விளக்கிப்பேசி விட்டு ஐவர் கொண்ட குழுமட்டும் இலங்கைத்துணை தூதுவரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தைத் தெரிவித்தனர்.

பின்னர் ஜெயேந்திரன், தாஸ், சேலம்பாவரசு, ராமராஜ், மதுசூதனராவ் ஆகியோர்கொண்டகுழு நேப்பியர் பூங்காவிலிருந்து புறப்பட்டு இலங்கைதுணைத் தூதுவர் அலுவலகத்தை அடைந்தது.

அங்கு துணைத்தூதுவரிடம் ஈழமாணவர்பொது மன்றம் தாயகம் திரும்பிய ஈழமாணவர்கள் மற்றும் இளைஞர் அணி, தமிழ்நாட்டு அனைத்துக்கல்லூரி மாணவர்கள் பேரவை, தமிழக மாணவர் பொதுமன்றம் தமிழக ஈழ நட்புறவுக்கழகம் தாயகம் திரும்பிய மக்கள் உரிமை இயக்கம் முதலானபதினொரு அமைப்புக்கள் சார்பில் மகா விண்ணப்பம் தரப்பட்டது,

அம்மகா விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் வருமாறு—

★ பாசிசச் சட்டங்களால் மரண தண்டனையை எதிர் நோக்கியுள்ள குட்டிமணியையும் ஜெகனையும் உடனடியாக எந்த நிபந்தனையுமில்லாமல் விடுதலை செய்க

★ இலங்கை இராணுவ முகாம்களில்மெத்தவும் மிருகத்தனமான காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளுக்குஆளாக்கப்படும் அரசியற்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்க.

★ அரசாங்கத் தரப்பு சாட்சியங்களைமட்டும் எடுத்துக்கொண்டு தீர்ப்புகள் எழுதுவது நீதித்துறையையே கேலிக் கூத்தாக்குவதாகும். அதை ஒதுக்கித்தள்ளிமுறையான நீதித்துறைக்கு வகை செய்ய வேண்டும்.

★ தமிழர்களது ஈழப் பகுதியில்ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருக்கும்சிங்களஇராணுவத்தை உடனே திரும்பப் பெற வேண்டும்.

★ காலியில் கொள்ளையடிக்கப்பட்ட. தமிழ் முஸ்லிம்களின் சொத்துக்களைத் திரும்பத்தரவேண்டும். அவர்களுக்குரிய நட்டஈடும் தரப்படவேண்டும்.

இந்த மகா விண்ணப்பத்தின் நகல்கள் இந்திய அரசு மனித உரிமைச்சங்கம் முதலானவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## ஈழவிடுதலைப் போராளிகளை விடுதலை செய்யக்கோரி லண்டனில் புதிய இயக்கம்

சிறீலங்கா அரசின் நீதிமன்றத்திஞல் மரணதண்டனை விதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராளிகளான குட்டிமணி, ஜெகன் ஆகியோரையும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழீழ அரசியற் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு சிறீலங்கா அரசு மீது சர்வதேச நிர்ப்பந்தம் ஒன்றைக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் உடனடியாக இறங்குவதற்கு லண்டனில், Campaign for the Release of Eelam Freedom Fighters— ஈழ விடுதலைப் போராளிகளின் விடுதலைக்காக உழைக்கும் இயக்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் லண்டனில்இயங்கும் தமிழீழ விடுதலை இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுகூடி மேற்கண்டவாறுமுடிவு செய்துள்ளன, இக்கூட்டத்தில் தமிழ்ஈழ விடுதலை அணியின் சார்பில் அதன் அமைப்புச் செயலாளர் திரு. ஈழவேந்தனும் பங்கு பற்றினர்,

★ தமிழ்ஈழ விடுதலைப் போராளிகளை விசாரிக்கவோ தண்டிக்கவோ, சிறீலங்காவுக்கு நியாயாதிக்கம் கிடையாது.

★ ஏனெனில் சர்வதேச சட்டரீதியாக ஈழத் தமிழர்கள் இப்பொழுது ஒரு தனி நாடாகி விட்டனர்.

★ பயங்கரவாதத்தடைச் சட்டம் உலக நாடுகள்சபையினுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கும், சர்வதேசசட்டங்களுக்கும் முரணுனது.

மேற்கண்ட மூன்றுஅம்சங்கள் கூட்டத்தில்சுட்டிக்காட்டப்பட்டன.

இக்கூட்டத்தில் நவசமசமாசக் கட்சியின் லண்டன் கிளையும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும்கலந்துகொண்டன.

தமிழர் உரிமைக் குழுவின் சார்பில் மேரிடைன்ஸ்அவர்களும் கலந்து கொண்டார்.

இக்குழுவின் செயலாளர்களாக திரு. பாலசேகரமும் போல் டேவிட்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் அண்மையில் உருவான தமிழீழவிடுதலைப் பேரவையின் ஐக்கிய இராச்சியஉறுப்பினர்களான திருகிருஷ்ணவைகுந்தவாசன் திருமதி பத்மா பேரின்பநாயகம், டாக்டர்' எஸ் நவரத்தினம் ஆகியோரும்பங்குபற்றி ஆலோசனைகளை வழங்கினர்

பின்வரும் மூன்று கோரிக்கைகளை வைத்து இந்த இயக்கம் செயற்படும்.

(1) சிறீலங்காவின் சகல அடக்குமுறைச்சட்டங்களும் பயங்கர வாதத் தடைச்சட்டமுட்பட—நீக்கப்படவேண்டும்.

(2) அண்மையில்மரணதண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணி, ஜெகன் ஆகியோரை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

(3) சிறீலங்காஅரசின் தடுப்புக்காவலிலும் சிறைகளிலுமுள்ள தமிழீழ அரசியற் கைதிகள் அனைவரும்விடுதலை செய்யப்பட வேண்டும்.

இந்த இயக்கம் படிப்படியாக சகல நாடுகளுக்கும் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும்.

## "தமிழீழ விடுதலை வீரர்களின் உயிர்கள் வெறும் கிள்ளுக்கீரையல்ல"

### சிறீலங்கா துணைத்தூதரிடம் தமிழக நட்பு மன்றம் கண்டனம்

தமிழ் நாட்டில் இயங்கும் தமிழர் நட்புமன்ற இயக்குநர் திரு. நெடுமிடல் அவர்கள் தமிழக மக்களின் சார்பில் சென்னையிலுள்ள சிறீலங்காத் தூதரிடம், பின்வரும் கோரிக்கைகள்அடங்கிய மனுவை கையளித்துள்ளார்.

அம்மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:

எங்களுடைய கீழ்க் குறித்துள்ள கோரிக்கைகளைத் தங்கள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.


1. மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள விடுதலை வீரர்கள் குட்டிமணி, ஜெகன்இருவரையும் உடனே விடுதலை செய்க. தமிழர்களின் உயிர்கள் கிள்ளுக்கீரை அல்ல; உங்கள் விருப்பம் போல கிள்ளி எறிய.

2 விசாரணை என்கின்ற பெயரால் இராணுவ முகாம்களிலும், காவல்நிலையங்களிலும் வைத்துமிகமிகக்கொடுமையான துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ள தமிழீழ இளைஞர்கள் அனைவரையும் உடனே விடுதலை செய்திடுவீர். தமிழீழ மக்களின் மீது ஆட்சி அதிகாரம்செலுத்த உங்கள் அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை, தமிழீழத்தைப் பொறுத்தவரை சிறீலங்கா அரசு ஓர் அயலரசு; ஆக்கிரமிப்பு அரசு,

3 தமிழீழத்தின்மேல்சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ள நெடுங்கால் ஆக்கிரமிப்பினை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும். சிறீலங்கா இராணுவத்தையும் காவல்படைகளையும் தமிழீழப் பகுதிகளிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4 . தமிழீழ மக்களை கொடுமைப்படுத்துவதற்காகவே இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற மனித விரோதசட்டங்கள் அனைத்தையும் உடனடியாக தள்ளவழி செய்து, தமிழீழ மக்களை நாகரீகமாகவும் கண்ணியமாகவும் நடத்த சிறீலங்கா அரசு முயலவேண்டும்.

உலகத்தின் எப்பகுதியில் வாழும் தமிழர்களானாலும் அவர்களுக்கு இடுக்கண் நேருங்கால் அதனைத் துடைக்க முயல்வது எங்களுடைய கடமை என்கின்ற அடிப்படையிலும் உலகளாவிய மனிதாபிமானத்தின் அடிப்படையிலும்சிறீலங்கா அரசுக்கு இந்தக் கோரிக்கைகளைமுன் வைக்கிறோம். நன்றி வணக்கம்,



### தந்தை செல்வாவின் புகைப்படங்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு!

மூதறிஞர் தந்தை செல்வாவின் அழகிய புகைப்படங்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு. சுதந்திரன் அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். சிறிய படம் ரூபா 2.1 பெரிய படம் ரூபா-5

# பரந்தன் போராட்டத்தில் சில தொழிற்சங்கங்களின் கண்துடைப்பு!

எமதுதொழிற்சாலையில் நடைபெறும்வேலை நிறுத்தப்போராட்டம் இலங்கைத்தீவில் உள்ள சகல இனமக்களும் அறிந்த ஒரு போராட்டம்ஆகும். தொழிற்சாலையில் இயங்கிவரும் பிரதான நான்குதொழிற்சங்கங்களில் அங்கத்தவராக உள்ளதொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்; இலங்கை வர்த்தகஊழியர்சங்கம் ஐக்கிய வர்த்தக ஊழியர் சங்கம் (சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டில்) இலங்கை அரசாங்க கூட்டுதாபன ஊழியர் சங்கம் இலங்கை கம்யூனிட் கட்சி மாஸ்கோபிரிவு) பரந்தன் இரசாயனத் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களின் அங்கத்தவர்களே இவ்வேலை நிறுத்தத்தில்1981ம் ஆண்டு நவம்பர்மாதம் 27ம் திகதி முதல் ஈடுபட்டு வருகின்றார்கள்;

இதுவரையில்இப்போராட்டத்தைப் பற்றி சிந்தித்து செயல்படாது தென்னிலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளும் தமிழ்ஈழத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் கூட்டு மௌனம் சாதித்து வருகின்றது. இதுதொழிலாளர் மத்தியில் பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது. இருந்தாலும் இரசாயனத் தொழிலாளர்கள் எவ்வளவோ கஷ்டத்துக்குமத்தியிலும் தமது போராட்டத்தை தொடர்ந்து நடத்திவருகின்றார்கள்.

இலங்கையில் உள்ளமூன்று பிரதான தொழிற்சங்கங்கள் பங்குபற்றிய போதிலும் வர்த்தக ஊழியர் சங்கமே இப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் ஆதரவும் நல்கிவருகின்றார்கள், அதேபோல் நிதி விசயமாக கிளிநொச்சி, சாவகச்சேரி பருத்தித்துறைதொகுதி மக்களும் தங்களால் இயன்ற நிதி உதவி கொடுத்துவருகின்றார்கள்போராட்டம் ஆரம்பமாகிய காலத்தில் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊயழிர்களும் நிதிஉதவி வழங்கியுள்ளார்கள்.

இலங்கைவர்த்தகஊழியர் சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கும் ஊழியர்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு மாதம்தோறும் 100 ரூபாவை சங்கபேதம் இல்லாமல் வழங்கிவருகின்றார்கள். இலங்கை வர்த்தக ஊழியர்சங்கத்தின் பொதுக்காரியதரிசி தோழர் பாலாதம்பு இப்போராட்டம் பற்றிசர்வதேசதொழிற்சங்கத்தின்கவனத்துக்கும் நேரடியாக எடுத்து கூறினார். அதன் பயனாக ஒல்லாந்தநாட்டில் உள்ள ஒரு தொழிலாளி தனது நாட்டின் நாணயத்தில் 75 ஆயிரம் ரூபாவை காசோலை மூலம் அனுப்பியுள்ளார்.

ஆனால் எமது தொழிற்சாலையில் இயங்கும் கம்யூனிஸ்ட் கட்சி(மாஸ்கோபிரிவு) தொழிற்சங்கத் தலைவர் கிளிநொச்சிகம்யூனிஸ்ட் கட்சியில் செயலாளர் வடபகுதிலங்கா தொழிற்சங்க சம்மேளனத்தின் உபதலைவரும் அவர். ஆனால்இதுவரையில்அவரும் வர்த்தகஊழியர்சங்கத்தால் வழங்கும் மாத நிதியை பெற்று வருகின்றார்.

சென்ற மாதம் 14ம்திகதி எமது வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக இலங்கை பூராகவும் உள்ள பாலாதம்புவின் சங்கம் ஒரு அடையாள வேலை நிறுத்தத்தை நடத்தியுள்ளது, அது பெரும்வெற்றி அளித்துள்ளது. ஆனால்இலங்கைகம்யூனிஸ்ட்கட்சி லங்கா சமசமாஜக்கட்சியோ வேறு கட்சிகளோ அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை. அதுமட்டும் அல்ல 23ம் திகதி முதல் ஒரு வாரம் நடைபெறும்பொது வேலை நிறுத்தத்தை இலங்கைவர்த்தக ஊழியர் சங்கப் பொதுசபை அங்கீகாரத்துடன் நடத்தவர்த்தக ஊழியர்சங்கம் தீர்மானித்துள்ளது,

சுருங்கக்கூறின் கட்சிகள் தொழிற்சங்கங்களின் மத்தியில் உள்ள வியாபாரப் போட்டி தொழிலாளர் ஆகிய எங்களை கஷ்டத்துக்குள் கொண்டுவரும் என்பதை தொழிலாளர் உணர வேண்டும்.

போலிக்கட்சி தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிப்பதை தவிர்க்க வேண்டும்,

கம்யூனிட் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள வட பிரதேசலங்கா தொழிற்சங்க சம்மேளனத் தலைவர்கள் எமதுபோராட்டத்தைஇட்டு இதுவரையில் ஒரு முடிவும் எடுக்காமலும் நிதி உதவி கொடுக்காமலும் இருப்பது தங்கள்போலித் தலைமையை மக்கள் மத்தியில் புகைப்படம் எடுத்து காட்டுவது போல் அமைந்திருக்கின்றது;

தொழிலாளர்களால்வழங்கப்படும் அங்கத்ததுவபணத்தில் வயிறுவளர்க்கும் கும்பல்தான் வடபிரதேசலங்கா தொழிற்சங்க சம்மேளனம் என் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கதைக்கஆரம்பித்து விட்டார்கள்;

வெல்க எமது போராட்டம்

காட்டிக்கொடுக்கும் தலைமையை ஒழிப்போம்.

வாழ்க இரசாயன தொழிலாளர் ஐக்கியம்

**சி. நாகரெத்தினம்**

## பாரிஸ்மாநகரிலும்

—1-ம் பக்கத் தொடர்

ஊர்வலத்தில் பின்வரும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

"தமிழீழத்திலிருந்து சிறீலங்கா இராணுவமே வெளியேறு!"

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்று!

"தமிழ் மக்களின் வீடுகளுக்குத் தீயிடாதே!"

"குட்டிமணிக்கும் ஜெகனுக்கும் தூக்கு— ரோகண விஜயவீராவுக்கு விடுதலை;"

கூட்டணியே! பேச்சுவார்த்தை என்னாச்சு? குட்டிமணிக்கும் ஜெகனுக்கும் தூக்காச்சு"

"சர்வாதிகாரி ஜே. ஆரே! விடுதலைப் போராளிகளை விடுதலைசெய்!'

"உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்—ஈழவிடுதலைக்கு குரல் கொடுங்கள்"

"ஜனநாயக சோசலிசம் என்னாச்சு— ஜெகனுக்கும் குட்டிமணிக்கும் தூக்காச்சு"

"பிரான்ஸ் அரசே அநீதியை எதிர்த்துக் குரலெழுப்பு"

இவ்வாறு கோஷமெழுப்பியபடி வந்தஊர்வலத்தினர் சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கும்படி கோரி, பிரான்சின் சிறீலங்காத் தூதர் திரு. பாலசுப்பிரமணியத்திடம் மகஜர் ஒன்றைக் கையளிக்க விரும்பினர்.

ஊர்வலம் வந்த தமிழர்களின் வேண்டுகோளை பிரெஞ்சு பொலிசார், திரு. பாலசுப்பிரமணியத்திடம் தெரிவித்தபோது, அத்தொடை நடுங்கித்தமிழர், ஊர்வலக் குழுவினரைச் சந்திப்பதற்கோ, மகஜரைக் கையேற்கவோ முடியாதென்று ஒரேயடியாக மறுத்து விட்டார்.

சிறீலங்காத்தூதரின் இப்பண்பற்ற செயல் கண்டு பிரெஞ்சு பொலிஸ் அதிகாரிகளே அதிர்ச்சியடைந்தனராம். ஒரு தமிழ்த் தூதுவர் இருந்தும், தமிழர்களின் மகஜரைஏற்கமறுக்கும் போது. சிறீலங்காவில் ஏனையோர் எவ்வளவுபாரபட்சம்காட்டுவார்கள் தமிழர்கள்மீதுஎன்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதென்று ஒரு பிரெஞ்சு பொலிஸ் அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்தார்.

பிரான்சில் நடந்த இந்த ஊர்வலம்மிகப்பெரிய வெற்றியை அளித்ததுடன், தமிழீழ மக்கள் மீது சிறீலங்காவின் ஆயுதப்படைகள் மேற்கொண்டுள்ள அடக்குமுறையையும் பிரெஞ்சு மக்கள் தெரிந்துகொள்ளஒரு வாய்ப்புஏற்படுத்திவிட்டது.

## விடுதலைப் போராளிகளை தூக்கில் போடாதே....

—1-ம் பக்கத்தொடர்

வேண்டும் என்றுநீதிமன்றம் ஆணையிட்ட பின்பும் புன்னகை புரிந்தார்கள்.

'கடைசியாக ஏதாவது சொல்ல வேண்டிஇருந்தால் நீதிமன்றத்திலே சொல்லிக்கொள்ளலாம்' என்றுகேட்டபோது அந்த வாலிபர்கள் சொன்னார்கள்; எங்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற இந்த மரண தண்டனை இலங்கையிலே உள்ள தமிழ் இளைஞர்களை, தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக உசுப்பிவிடும். உற்சாகப்படுத்தும். எனவே இந்த தண்டனையை நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறோம்' என்று.

அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை மொழிபெயர்த்து நீதிபதிக்குச் சொன்னார்கள் அந்த வாலிபர்களுடைய வழக்கறிஞர்கள். அவர்களால் சொல்ல முடியவில்லை. மொழிபெயர்க்கும் போதேஅழுதுகொண்டு உட்கார்ந்து விட்டார்கள். ஒருவழக்கறிஞர்உட்கார்ந்த பிறகு, இன்னொரு வழக்கறிஞர் எழுந்து மொழிபெயர்த்தார். அவரும் சொல்ல முடியாமல் கண்கலங்கி அமர்ந்து விட்டார். அந்த இளைஞர்களின்சார்பில்வாதாடியவழக்கறிஞர்களிலேஒருவர்சொன்னார். 'நீதிபதிஅவர்களேகுற்றத்திற்காக நீங்கள் விதித்த தண்டனையில் நான் குறுக்கிடத் தயாராக இல்லை. இருந்தாலும், மரண தண்டனையைக் குறைத்து, இந்த இரண்டு வாலிபர்களுக்கும் ஆயுள் தண்டனை கொடுங்கள்' என்று கேட்டார்.

உடனே கூண்டிலேஇருந்த அந்தக் கொள்கைசிங்கங்கள் அந்த வழக்கறிஞரைத் தடுத்து "அப்படிக் கேட்காதீர்கள்; மண்டியிடாதீர்கள்;எங்கள் தண்டனையைக் குறைக்கச் சொல்லிக் கேட்காதீர்கள். சட்டரீதியாக வேண்டுமானால் வாதாடுங்கள். எவரிடமும்எங்களுக்காகஉயிர்ப்பிச்சை கேட்காதீர்கள், அது தேவையில்லை" என்று சொல்லி இரண்டு பேரும் தூக்குக் கயிற்றைமுத்தமிடத் தயாரென்று இன்று காராக்கிருகத்திற்குள்ளே — கம்பிகளுக்குள்ளே அடைபட்டுக்கிடக்கின்றார்கள்,

நான் படுத்தால்— கண்ணை மூடித் தூங்கலாம் என்றுநினைத்தால்- என் கண் முன்னால்குட்டிமணியினுடைய உருவமும், ஜெகனுடைய உருவமும் தான் நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன.

தமிழர்களே! இன்றுமுதல் உங்கள் கண்களில் எல்லாம் அந்த உருவங்கள்தெரிந்திட வேண்டும்.

எதற்காக இரண்டு பேர்; இன்னும்75பேர்- இந்தச்சித்திரவதைக்குஆளாகிறார்கள்; எப்படிப்பட்டசித்திரவதை?

இங்கே இருக்கும் தாய்மார்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். அந்த வாலிபர்களைப் புலன் விசாரணை செய்கிறோம் என்றபெயரால் அவர்களுடைய ஆசன துவாரத்தில் இரும்புக் கம்பிகளை ஏற்றி "சொல்! நாங்கள் சொல்வதைப்போல்சொல்" என்ற அளவிற்கு அங்கே இலங்கைத்தமிழர்கள்கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள்.

குட்டிமணியும், ஜெகனும் எப்படிக் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்றால்உயரத்திலே ஒரு கம்பியில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு, கீழே நெருப்பை மூட்டி— நெருப்பின் தணல் மேலே தாவித் தாவி அவர்களை வாட்டி வதைத்திருக்கின்றனர்.

இப்படிப்பட்ட புலன்விசாரணை இலங்கையிலே நமது தமிழ்ரத்தங்களுக்கு— நம்முடையநாடிநரம்புகளுக்குநடத்தப்படுகிறது.

அதைக் கண்டித்து குரல் கொடுக்கின்ற இயக்கம் தி. மு. கழகம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது!

குட்டிமணி—ஜெகன் இருவரையும் இலங்கைஅரசுவிடுதலை செய்ய வேண்டும். அது மாத்திரமல்ல; சுமார்75விடுதலை இயக்கவீரஇளைஞர்களையும் விடுதலை செய்யவேண்டும்என்றுகுரலெழுப்புவதற்காக 28ம் நாள் காலையில் இருந்து மாலை வரை கருப்புச் சின்னத்தை உடையில் அணிந்திட வேண்டும். மாலையில் பொதுக் கூட்டங்கள் நடத்திட வேண்டும்.

தமிழனுக்காக— தமிழன்
..............................

இந்த ஒருஉணர்வைக் கூடக்
..............................

காட்டக்கூடாதா?
....................

செய்தி அளிப்பு:
[தமிழர்செய்திக் கழகம்]

## யாழ்ப்பாணத்துக்கு மேலதிகமாக 1000 பொலீசார்!

சிறீலங்கா ஜனாதிபதி தேர்தல், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் 'கடமை' ஆற்றுவதற்கென விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் எனும் பெயரில்சிங்களப் பகுதிகளிலிருந்து 1000 பொலீசார் யாழ்மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கிறார்கள்.

இதன் விளைவாக 1981 யூனில் மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலின்போது ஏற்பட்ட அரசபயங்கரவாதம் மறுபடியும் ஏற்படலாமோவென்று தமிழீழ மக்கள் இப்பொழுதே அஞ்சத் தொடங்கிவிட்டார்கள்,

தேர்தலுக்குப்போய் வாக்களிப்பதைவிட தேர்தலைப் பகிஷ்கரித்து வீட்டிலிருந்துவிடுவதே வீண் ஆபத்துக்களிலிருந்து தப்புவதற்கு வழியென்று பலர் கருத்துத் தெரிவித்தனர்;

இப்பத்திரிகைசிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம், மகாத்மா காந்தி வீதி 15-ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில்1982-ஆம்ஆண்டு செப்டம்பர் மாதம், 1-ஆம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.